செ.வெ.எண்: 03 நாள்:03.06.2019

# பத்திரிக்கை செய்தி

இந்திய பாதுகாப்பு அமைச்சரின் நிதியிலிருந்து முன்னாள் படைவீரர்களின் குழந்தைகளுக்கு 2019-20ம் ஆண்டுக்கான கல்வி உதவித்தொகைக்கு விண்ணப்பிக்க தகுதிகள் மற்றும் நிபந்தனைகள் வருமாறு:-

1) 1 முதல் 12-ம் வகுப்பு வரையுள்ள இரு குழந்தைகளுக்கு மட்டுமே விண்ணப்பிக்கலாம். சம்மந்தப்பட்ட குழந்தையின் பெயர் Part-II Order-ல் அல்லது குடும்ப உறுப்பினர் பட்டியலில் இடம் பெற்றிருக்க வேண்டும்.

2) www.ksb.gov.in என்ற இணையதளத்தில் Online மூலமாக மட்டுமே விண்ணப்பித்திட இயலும்.

3) ஜேசிஓ மற்றும் அதற்கும் மேலான தரத்தினர் இதன்கீழ் விண்ணப்பிக்க இயலாது.

4) விண்ணப்பம் KSB-க்கு ஒன்று முதல் ஒன்பதாம் வகுப்பு வரை 30-09-2019-க்குள்ளும் மற்றும் பத்து மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு 30.10.2019க்குள்ளும் அனுப்ப வேண்டும் என்பதால் நாளது தேதிக்கு முன்னதாக விண்ணப்பித்திடல் வேண்டும்.

5) மேற்கண்ட நிபந்தனைகளுக்கேற்ப முழுமையான விவரங்கள் / சான்றுகள் இல்லாத மற்றும் குறிப்பிட்ட தேதிக்குப் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் பரிந்துரைக்க இயலாது.

இது தொடர்பான விவரங்களை, திருச்சிராப்பள்ளி மாவட்ட முன்னாள் படைவீரர் நல உதவி இயக்குநர் அலுவலகத்தினை அணுகிப் பயன்பெறுமாறு, கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்,இ.ஆ.ப அவர்கள் கேட்டுக் கொள்கிறார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கரூர்.**